சந்தா ரூ. 1 / ௦ ௪ [illegible] 1950

# ஆரம்பக்கல்வி

## ELEMENTARY EDUCATION




" ஆரம்பக் கல்வி ஆபீஸ் "
94-95. புதுத்தெரு மண்ணடி மதராஸ்.

தி அணு 2. இதழ் !

40 மாத்திரைகள் அடங்கிய



டப்பி 1-க்கு விலை ரூபா 1.

நவ யௌவனம் வேண்டின்
உலகப்பிரசித்தி பெற்ற தேக புஷ்டிக்கு
தாது புஷ்டிக்கும் சிறந்த டானிக்

## மதன மஞ்சரியை

உபயோகியுங்கள்.

இம்மாத்திரைகள் அஜீர்ணம், மலச்சி
ஞாபகக் குறைவு, நரம்புத் தளர்ச்சி இவை
நாசமாக்கி தேகபுஷ்டியும் தாது புஷ்
கொடுத்து இல்லறவாழ்க்கையில் இன்பத்தை
ஊக்கத்தையும் தரும்.

இன்றே! கேட்டாக் இ

ஒரு மணிநேரத்தில் வாலிபம்

### ரமணா விலாசினி

இரவில் ஒரு மாத்திரை படுக்கைக்குச் செல்லும் ஒருமணி நேரத்துக்குமுன் சாப்பிடுவதால் இஷ்டப்படி வீரிய ஸ்தம்பனம் உண்டாகின்றது.



ஒரு டப்பி விலை ரூ. 1—0-

மதன மஞ்சரி பார்மஸி.
22, சைனாபஜார் ரோ

AMIRTHA

# Kalpa Lehyam

FOR

VIM, VIGOUR AND VITALITY

DIRECTION:—

1/8 Tola to be taken twice a day with milk.

½ lb. Bottle Rs. 2

அமிர்த கல்ப லேகியம்

வீரிய விருத்திக்கு நிகரற்றது.
1/8 தோலா பாலுடன் இரண்டு வேளை சாப்பிடத் தகுந்தது.
½ பவுண்ட் புட்டி 2 0 0



PADMA PATHRA THAILAM

Cools the brain and ey
and cures all sorts of Hea
aches. It dispels all kinds
Chronic fevers keep a bott
always at hand.

For 1 or 2 Bathes a Week.

| | | | |
|---|---|---|---|
| 12 oz Bottle | 1 | 4 | 0 |
| 6 oz Bottle | 0 | 10 | 0 |

பத்மபத்ர தைலம்.

சகல விதமான சிரோரோகங்களையும், கிரானிக் சுரத்தையும் போக்கி கண்களுக்கும் மூளைக்கும் குளிர்ச்சியைக்கொடுக்கும்.

12 அவுன்ஸ் பாட்டில் 1 4 0

VYDIA SREENIVASA IYAH, Sri Venkateswarashaman, Mint Post Madras.
Teacher Managers will be given at ½ Rates

தொகுதி 4, பகுதி 5.] வருடச் சந்தா 1. [நவம்பர் 193

# ஆரம்பக்கல்வி
# ELEMENTARY EDUCATION

"ஆரம்பக் கல்வி"யின் முன்னேற்றத்திற்காக உழைக்கும் ஓர் மாதாந்திர பத்திரிகை.

EDITOR.

P. VEERARAGHAVAN (Member, Madras District Educational Council)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1 - DEC 1938
MADRAS

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

## சென்னை சட்ட சபையில்
## ஆரம்பக் கல்வி

ஆரம்பக் கல்வி கிராண்டு குமாரராஜா கனம் முத்தையா செட்டியார் சிவிலாகாவுக்கு 460100 ரூபாய் உபமான் அனுமதிக்குமாறு பிரேரேபித்தார்.

ஆரம்பக்கல்வி கிராண்டில் செய்யப்பட்ட .தாசாரக் குறைவைப் பெரும்பாலும் நீக்க .ம், ஆரம்ப ஆசிரியர்களின் சம்பளத்தை .யர்த்தவும், மேற்பார்வை உத்தியோகஸ்தர் .களை அதிகரிக்கவும் இது உத்தேசிக்கப்படுவதா .ம் ஆரம்பக்கல்வி உபகமிட்டி மிகவும் உப .யாகமான யாதாஸ்தைச் சமர்ப்பித்திருப்பதா .ம் அதன் பல சிபார்சுகள் இதன்மூலம் நடத்தி .வைக்கப்படுவதாயும் மற்றவை காலக்கிரமத்தில் .வனிக்கப்படுமென்றும் சபையில் பலரும் ஆரம்பக்கல்வி விஷயத்தில் கூறியயோசனைகள் .க்கபடி கவனிக்கப்பட்டிருப்பதாயும் அதிகம் .ணமும் முயற்சியும் வீணாவதைத் தடுக்க ஏற் .பாடு செய்யப்பட்டிருப்பதாயும் கிராமங்களிலுள்ள குழந்தைகள் பலமைல் தூரம் செல்ல முடியாதாகையால் அங்கேயே அவர்களுக்குக் கல்வி கிடைக்குமாறு செய்வது அவசியமாயிருப்பதாயும் மூன்றாவது வகுப்பு வரையுள்ள பாடசாலைகளை அதிகமாகவும் அதற்கு மேலுள்ள வகுப்புக்களடங்கிய பாடசாலைகளை மத்திய ஸ்தலங்களிலும் இருக்குமாறு செய்யப் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் கிடைக்கையில் அவர்களை நியமிப்பதுடன் பயிற்சி பெறாதவர்களைத் திடீரென்று நீக்கிக் கஷ்டமுண்டு பண்ணக் கூடாதென்றும் திறமையான பள்ளிக்கூடங்களுக்கு அதிக ஆதரவளிக்கவேண்டுமென்றும் ஹையர் எலிமெண்டரி ஆசிரியர்களின் சம்பளத்தில் ஒரு ரூபாய் உயர்த்தப்படுமென்றும் செகண்டரி ஆசிரியர்களின் சம்பளமும் ஒரு ரூபாய் உயர்த்தப்படுமென்றும் அடுத்த வருஷம் முன்னவர்களுக்கு ஒரு ரூபாயும் பின்னவர்களுக்கு ஒரு ரூபாய் உயர்

130345



கொடுக்கப்படுமென்று நம்புவதாயும் ஆசிரியர்களின் வேலை நிலைமையை கவர்ன்மெண்டார் விசாரித்து வருவதாயும் மேற்பார்வைக்கு 4 டிவிஷனல் இன்ஸ்பெக்டர்களையும் 28 ஜூனியர் டெப்டி இன்ஸ்பெக்டர்களையும் 2 ஸப் அஸிஸ்டெண்டு இன்ஸ்பெக்ட்ரெஸ்களையும் நியமிக்கப்போவதாயும் கனம் மந்திரி கூறினார்.

ஆசிரியர்களின் கஷ்டம்

ஸ்ரீமான் ஜி. ஆர். பிரேமையா 100 ரூபாய் குறைக்குமாறு பிரேரேபித்துப் பேசுகையில் முறை கிராண்டு குறைக்கப்படக்கூடாதென்றும் கிராண்டு காலத்தில் கொடுக்கப்படாமல் தாமதம் செய்யப்படுவதாயும் ஆசிரியர்களின் நிலைமை மிகவும் துக்ககரமானதாக இருப்பதாயும் மேற்பார்வை அதிகமாக நடந்தால் நன்மையே ஏற்படுமென்றும் கூறினார்.

ஸ்ரீமான் எம். கோபாலசாமி முதலியார், இம்மாதிரிச் சிறிது சிறிதாக நடத்திவைப்பதில் பலனில்லையென்றும், இத்தனை வருஷங்களுக்குப்பிறகும் எழுதப்படிக்கத் தெரியாதவர்களின் தொகை அதிகமாயிருப்பதாயும் ஆரம்பக் கல்விச்செலவை கவர்ன்மெண்டின் முதல் பொறுப்பாகச் செய்து அனைவருக்கும் கல்வி போதிக்கவேண்டுமென்றும் கூறினார்.

புதிய மந்திரிக்குப் பாராட்டு

ஸ்ரீமான் கோடி ரெட்டி, இம்மாகாணத்தில் உதவிக் கல்வியின் நிலைமை மிகவும் அதிருப்திகரமாக இருப்பதாயும், புதிய மந்திரி முந்திய மந்திரியைப்போல் விஷயங்களை மழுப்பாமல் வியக்தமாக உணர்ந்து எடுத்துக் கூறியிருப்பதாயும், கவர்ன்மெண்டார் ஆசிரியர்களுக்காகக் கொடுக்கும் கிராண்டு அவர்களிடம் பூரணமாகப் போய்ச் சேரவில்லையென்றும், ஜில்லா போர்டுப் பாடசாலை ஆசிரியர் சம்பளத்தில் பாதிக்குக் குறைவாகவே உதவிப் பாடசாலை ஆசிரியர்கள் பெறுவதாயும், ஆரம்பக் கல்வியின் பொறுப்பை கவர்ன்மெண்டே நேராக மேற்போட்டுக்கொள்ள வேண்டுமென்றும், முன்னறிவிப்பின்றித் திடீரென்று சென்று பள்ளிக்கூடங்களை மேற்பார்வைசெய்ய வேண்டுமென்றும் அதற்கு அதிக இன்ஸ்பெக்டர்களை நியமிக்க வேண்டுமென்றும் ஜில்லாக் கல்விக் கவுன்சில் தலைவருக்கு மற்றவர்களைவிடக் குறைவான பிரயாணப்படி கொடுக்கப்படுவதாயும், ஆரம்ப ஆசிரியர்களுக்கு வருஷா வருஷம் ரிப்ரெஷர் வகுப்பு நடத்தவேண்டுமென்றும் கூறினார்.

ஸ்ரீமான் எம். எஸ். சிரேஷ்டா ஆசிரியருக்கென்று கொடுக்கப்படும் கிராண்டு அவர்களிடம் போகுமாறு செய்யவேண்டுமென்றும், மானேஜருக்கும் வாடகைக்கும் தனியாகப்பிரித்துக் கொடுத்துவிட வேண்டுமென்றும் திறமையான உதவிப்பாடசாலைகளுக்குப் பக்கத்தில் ஜில்லா போர்டும் பாடசாலையேற்படுத்தி விடுவதாயும் மிஷனரிப் பாடசாலைகள் உண்மையில் கல்விப் பெருக்கத்திற்கு உதவி யளித்து வருகையில் அவற்றிற்கு எதிரான உணர்ச்சி பரவிவருவது வருந்தத்தக்கதென்றும் ஜில்லாக் கல்விக் கவுன்சில்களை எடுத்துவிடவேண்டுமென்றும் கூறினார்.

ஸ்ரீமான் கே. ஏ. நாச்சியப்ப கவுண்டர் கல்வி மந்திரியையும் கல்வி இலாகா டைரக்டரையும் அவர்கள் அளித்துள்ள உதவிக்குப் பாராட்டினார். புதிதாக உத்தியோகஸ்தர்களை நியமிப்பதை ஒத்திவைக்கலாமென்றும் கூறினார்.

தீவிர மேற்பார்வையின் அவசியம்

ஸ்ரீமான் டேனியல் தாமஸ் பிறகு பேசுகையில் மேற்பார்வை உத்தியோகஸ்தர்களின் தொகை போதாதென்றும் பல பாடசாலைகளில் பொய்க்கணக்கு வைக்கப்பட்டிருப்பது டெப்டி இன்ஸ்பெக்டர்களின் அஜாக்கிரதையால் நடப்பதாயும் கல்வி இலாகாவுக்கு இன்னும் அதிகத் தொகை கொடுக்கவேண்டுமென்றும் ஆரம்ப ஆசிரியர்களின் வேலை ஸ்திரமற்றிருப்பதாயும் 4 டிவிஷனல் இன்ஸ்பெக்டர்களை நியமிப்பது அனாவசியமென்றும் ஜூனியர் டெப்டி இன்ஸ்பெக்டர்கள் தான் அவசியமென்றும் கூறினார்.

கடைசிக்கால வீண் முயற்சி

ஸர். ஏ. பி. பாத்ரோ பிறகு பேசியதாவது: சட்டசபையின் இந்தக் கடைசிக்காலத்தில் பண மனுமதிப்பதன் மூலம் 2-3 மாதங்களில் உருப்படியாக எதையும் நடத்திவிடமுடியாது. டிவிஷனல் இன்ஸ்பெக்டர்களை நியமிப்பது



ரெவின்யூ போர்டைப் போன்றது. ஆரம்பக் கல்வியை வளர்த்து பலப்படுத்துவது முதலாவது வேலை. வீணாவதைத் தடுப்பதே நோக்கமென்று கவர்ன்மெண்டு குறிப்பில் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் அனுபவத்தில் சிறிதும் இது நடக்கவில்லை. ஜில்லாபோர்டின் கீழுள்ள சுமார் 1200 பள்ளிக் கூடங்களை ஜில்லாக்கல்வி உத்தியோகஸ்தர் மேற்பார்வை செய்யவேண்டியிருக்கிறது. திறமையான பள்ளிக்கூடங்களுக்கு முழு கிராண்டு கொடுக்கப் போவதாக கவர்ன்மெண்டார் கூறுகிறார்கள். எது திறமையான பள்ளிக்கூடமென்று எப்படிக் கண்டுபிடிக்கப் போகிறார்கள். அதுவே முக்கிய கேள்வி. திறமையை அளவிட ஒரு தரமேற்படுத்திக் கொள்ள வேண்டாமா? இப்போது எல்லா பள்ளிக் கூடங்களுக்கும் ஒரே விதமாகக் கொடுக்கப்படுகிறது. இந்த உபமான்யத்தின்படி நிலைமை மாறுகிவிடும். பள்ளிக்கூடங்களை முதலில் பெருக்க வேண்டும். முதல் 6 வருஷகாலம் இம்முறை யனுஷ்டிக்கப்பட்டது. பிறகு நிலைமை ஸ்தம்பித்துவிட்டது. கட்டாயக் கல்வியில் மந்திரி திவான்பகதூர் குமாரஸாமி ரெட்டியார் ஒரு திருத்தத்தைச் செய்து இரண்டுங் கெட்ட நிலைமையை உண்டு பண்ணினார். திறமையான பள்ளிக்கூடங்களுக்கு அதிக கிராண்டு கொடுக்குமாறு ஜில்லாக் கல்வி உத்தியோகஸ்தர் சிபார்சு செய்யவும் திறமையற்றவற்றிற்குக் குறைக்கவும் இப்போதே விதிகளில் இடமிருக்கிறது. ஜில்லாக் கல்விக் கவுன்சில் தங்கள் பகுத்தறிவை உபயோகித்து நடக்க அதிகாரமளிக்க வேண்டும்.

குழந்தைகள் நன்றாக எழுதப்படிக்கத் தெரிந்து கொள்ளும் வரையில் போதுமான காலம் பள்ளிக்கூடத்தில் வைத்திருக்க முடியாததையே வீணாகும் முயற்சியென்று ஹார்ட்டாக் கமிட்டி கூறியது. அந்த வியர்த்தத்தையே நாம் தடுக்க வேண்டும். டைரெக்டரின் பொறுப்பைக் குறைக்க டெப்டி டைரக்டர் இருக்கிறார். ஆகவே டிவிஷனல் இன்ஸ்பெக்டர்களைப் புதிதாக நியமிப்பது அனாவசியம்.

ஸ்ரீமான் பி. ஸி. முத்து செட்டியார் பிறகு பேசினார். அவர் தமிழில் தமாஷாகவும், கடுமையாகவும் பேசியது சபையில் நகைப்பை உண்டு பண்ணியது. பல மெம்பர்களும் கூறிய யோசனைகள் மந்திரியால் கவனிக்கப்பட வேண்டுமென்றும் ஜில்லா போர்டுத் தலைவர்கள் பள்ளிக் கூடங்களை மேற்பார்வை செய்வது சாத்தியமல்லவென்றும் தாலுக்கா போர்டுகளை எடுத்தது தவறென்றும் ஸர். பத்ரோவுக்குக் கல்வி யபிவிருத்தியில் ஊக்கமிருந்தால் தாலுக்காபோர்டுகளை எடுத்ததை எதிர்த்திருக்க வேண்டுமென்றும் மிஷன் பள்ளிக் கூடங்கள் திறமையாக நடப்பதற்குத் தீவிரமான கவனமும் மேற்பார்வையுமே காரணமென்றும் ஸர் பாத்ரோ மந்திரியாக விருந்தபோது தொழிற் கல்வியைப்பற்றி அதிகமாகப் பேசியபோதிலும் அனுபவத்தில் நடத்திவைக்கவில்லையென்றும் புதிய மந்திரி இதை முக்கியமாக கவனிக்க வேண்டுமென்றும் ஜில்லாக் கல்விக் கவுன்சில்கள் சரியாக வேலை செய்வதில்லையென்றும், கல்விக் கவுன்சில் மெம்பர்கள் தலைக்கு இத்தனை பள்ளிக்கூடத்தையாவது மேற்பார்வை செய்ய வேண்டுமென்றும் டிவிஷனல் இன்ஸ்பெக்டர்கள் இப்போது வேண்டாமென்றும் கூறினார்.

திறமை முறையால் சங்கடம்

ஜனாப் அப்துல் ஹமீத்கான் பிறகு பேசுகையில் அரைகுறையான முயற்சி பலனற்றதென்றும் அடிப்படையான சீர்திருத்தம் அவசியமென்றும் இந்தக் கடைசிக் காலத்தில் செலவழிக்கப்படும் பணம் வீணாகுமென்றும் திறமையான பள்ளிக்கூடமென்று பொறுக்குவது முஸ்லிம் பள்ளிக் கூடங்களையும் தாழ்ந்தவகுப்பினர் பள்ளிக்கூடங்களையும் பாதிக்குமென்றும் சாம்பியன் திட்டத்தால் பல முஸ்லிம் பள்ளிக்கூடங்கள் மத்தியப் பள்ளிக்கூடங்களில் சேர்க்கப்பட்டு முஸ்லீம் மாணவர்கள் விஷயத்தில் தக்க கவனம் செலுத்த முடியாமற் போய்விட்டதாயும் கூறினார்.

திரு. டி. எஸ். ராமஸ்வாமி ஐயர் பிறகு பேசுகையில் இந்தக் கடைசிக் காலத்திலாவது ஆரம்பக் கல்வியை ஸ்திரமான நிலைமையில் வைக்க முயற்சி யெடுத்துக் கொள்ளப்படுமா

பது சந்தோஷமளிப்பதாயும் 100-ல் 8½ பையன்கள் வீதம் தான் பள்ளிக்கூடத்திற்குப் போவதாயும் இது சந்தோஷமளிக்கக்கூடிய விஷயமல்ல வென்றும், திறமையான பள்ளிக்கூடங்களைக் கண்டுபிடிக்க முடியாதாகையால் எல்லா வற்றிற்கும் ஒரேவித கிராண்டுகொடுக்க வேண்டுமென்று சொல்லுவது சரியல்ல வென்றும் இன்னும் திறமையான ஆசிரியர்களை நியமிக்கவேண்டுமென்றும் கூறினார்.

### ஆரம்பக்கல்வி உபமான்யம்

திரு வி. ஐ. முனிசாமி பிள்ளை முதலில் பேசுகையில் உதவிப் பள்ளிக்கூடங்களின் நிலைமை இருதலைக் கொள்ளிபோலிருப்பதாயும் அவை மேற்பார்வை உத்தியோகஸ்தர்களையும் ஜில்லாக் கல்விக் கவுன்சில்களையும் திருப்தி செய்விக்கவேண்டி யிருப்பதாயும் விதிகள் தாராளமாக விருக்கவேண்டுமென்றும் கூறினார்.

திரு. ஸி. டி. நாயகம் பிறகு பேசுகையில் லோயர் எலிமெண்டரி ஆசிரியர்களின் சம்பளத்தை உயர்த்தாமல் அவர்களைப் படிப்படியாக நீக்கிவிட உத்தேசிக்கப்படுவதாயும் செகண்டரி பயிற்சிபெற்ற ஆசிரியர்களுள்ளும் இம்மாதிரி வித்தியாச மேற்படுத்த வேண்டுமென்றும் பொதுவாக ஆசிரியர்களின் நிலைமை உயர்த்தப்படவேண்டுமென்றும் உதவிப் பள்ளிக்கூடங்களில் குறைந்தபக்ஷ சம்பள விகிதமொன்றையேற்படுத்த வேண்டுமென்றும், ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளத்திற் கேற்றபடி கிராண்டை யதிகரிக்க வேண்டுமென்றும் ஆசிரியர்கள் பிரைவேட் டியூஷன் எடுத்துக் கொள்ளுவதை அடியோடு தடுக்க வேண்டுமென்றும், அவர்கள் புஸ்தகம் விற்பதையும் ஸ்டேஷனரி விற்பதையும் தடுக்க வேண்டுமென்றும் மேற்பார்வை உத்தியோகஸ்தர்கள் அதிகமாயிருந்தால் தான் பல ஒழுங்கீனங்களைத் தடுக்கமுடியுமென்றும் அனாதை விடுதிகளுக்கும் முதல்வருஷமே கிராண்டு கொடுக்கவேண்டுமென்றும் பெண் பள்ளிக்கூட மேற்பார்வையையும் அதிகரிக்கவேண்டுமென்றும், தனிமையான தொழில் இலாகா பள்ளிக்கூடங்கள் மறைவதை ஆதரிப்பதாயும் கூறினார்.

திரு. வி. பி. நாராயண நம்பியார் பிறகு பேசுகையில் ஆரம்பக் கல்வியை அபிவிர்த்திசெய்யவும் ஆசிரியர்களின் நிலைமையை உயர்த்தவும் கவர்ன்மெண்டார் முயற்சி யெடுத்துக் கொண்டிருப்பதைப் பாராட்டுவதாயும் மேற்பார்வை உத்தியோகஸ்தர்கள் அதிகரிக்கப்படுவது அவசியமென்றும் கூறினார்.

ஸ்வாமி ஸகஜானந்தம் பிறகு பேசுகையில் தொழிலாளர்களுக்குத் தனிப் பள்ளிக்கூடங்கள் அவசியமென்றும் சாதாரணப் பள்ளிக்கூடங்களில் தாழ்ந்த வகுப்பினர்களாகச் சேர்த்துக்கொண்டாலும் சரியாக நடத்துவதில்லையென்றும் புதிய மந்திரியின் காலத்தில் ஆசிரியர்களுக்கு நன்மை செய்யப்படுவதற்குச் சந்தோஷப்படுவதாயும் கூறினார்.

### பெண் கல்விக்கு வழி

ஸ்ரீமதி அலமேலு மங்கைத் தாயாரம்மாள் பிறகு பேசுகையில் பெண்களுக்கு ஆரம்பக் கல்வி கட்டாயமாகவும் இலவசமாகவும் போதிக்கப்பட வேண்டுமென்று வற்புறுத்தினார். அவர் ஒரு ஆங்கில யாதாஸ்திலிருந்து படித்துக் காட்டியதும் திரு, கோடிரெட்டி, அவர் ஆங்கிலத்திலேயே பேசலாமே என்று தெரிவித்தார்.

தலைவர்:-ஆங்கிலத்தைப் படித்தால் பேசவும் முடியுமென்று ஏற்படாது.

ஸ்ரீமதி அலமேலுமங்கைத் தாயாரம்மாள்:- நான் ஆங்கிலத்தில் என் அபிப்பிராயத்தைச் சரியாகத் தெரிவிக்க முடியாது. பெண்களுக்கு ஆரம்பக் கல்வியை 5-க்குப் பதில் 4 வருஷங்களிலேயே பூர்த்தி செய்துவிடலாம். பள்ளிக்கூடங்களில் மதபோதனை வேண்டாம். மதத் தலைவர்களைப்பற்றியும் ஆசார சீர்திருத்தத் தலைவர்களைப்பற்றியும் போதிக்கலாம். வகுப்பு ஒற்றுமைக்கானவழியில் போதிக்க வேண்டும். திறமையில்லாத பள்ளிக்கூடங்களை எடுத்துவிடாமல் திறமையுள்ளதாகச் செய்ய வேண்டும்.

திரு. ஸி. பாசுதேவ் பிறகு பேசுகையில், பள்ளிக்கூடங்களுக்கு இந்தச் சொற்ப உதவி போதாதென்றும், ஏழை மாணவர்களுக்குப் பாட புஸ்தகங்களை வாங்கி இலவசமாகக் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டு மென்றும்,



பாட புஸ்தக வியாபாரத்தில் அதிக லாபம் சம்பாதிக்கப்படுவதைத் தடுக்கவேண்டுமென்றும் கூறினார்.

### அடிப்படையான கொள்கை

ஜனாப் பஷீர் ஆமது சையது பிறகு பேசியதாவது:—ஒரே ஆசிரியர் உள்ள பள்ளிக்கூடம் திறமையற்றதென்று சொல்லிவிடக்கூடாது. எலிமெண்டரி டிரெயினிங் என்ற பயிற்சியை எடுத்துவிடவேண்டும். இன்னும் நல்ல பயிற்சியளிக்கவேண்டும். ஆசிரியர்கள் நகர மனப்பான்மை கொள்ளாமல் கிராமாபிவிர்த்தி நோக்கமுள்ளவர்களா யிருக்குமாறு செய்ய வேண்டும். தனி நபர் உதவியுடன் கவர்ன்மெண்டாரும் உதவியளிக்கப் போகிறார்களா அல்லது தாங்களே முழுப்பொறுப்பை யேற்கப்போகிறார்களா என்ற அடிப்படையான கொள்கையை முடிவு செய்து அதற்கேற்றபடி திருத்தியமைக்கவேண்டும். ஆசிரியர் சம்பளம் ஜீவனத்திற்குப் போதுமானதா யிருக்கவேண்டும் சம்பிரதாயமான வேலைகள் பல வற்றை டைரெக்டரே கவனிக்க வேண்டியிருக்கிறது. இவற்றை டிவிஷனல் இன்ஸ்பெக்டர்களுக்கு மாற்றிவிட்டால் டைரெக்டர் பெரிய முக்கிய விஷயங்களைக் கவனிக்கமுடியும். இதில் அதிகாரப் பிரிவினை அவசியமாகும்.

### மந்திரியின் பதில்

கனம் குமாரராஜா எம். முத்தையா செட்டியார் பதில் கூறியதாவது:—லோயர் கிரேட் ஆசிரியர்களுக்குச் சம்பள உயர்வு கொடுக்கவில்லை யென்று புகார் கூறப்பட்டது. அதிகமாக இவர்களைச் சேர்த்துக்கொள்ள உத்தேசமில்லை. ஆனால் இப்போது, வேலையிலுள்ளவர்களுக்குப் பாதக மேற்படாமல் பார்த்துக் கொள்ளப்படும். முதலில் உத்தேசித்ததை விட இதற்கு அதிகப்பணம் கொடுத்திருப்பதற்கு பொக்கிஷமெம்பருக்கு வந்தனமளிக்கிறேன். அசெஸ்டு கிராண்டில் விகிதாசாரக் குறைவு அடுத்த வருஷம் அடியோடு நீக்கப்பட்டுவிடும். நமது கவர்ன்மெண்டார் வருஷத்திற்கு 246 லக்ஷம் ரூபாய் கல்விக்காகச் செலவழிக்கிறார்கள். இதில் பாதிக்குமேல் ஆரம்பக்கல்விக்குப் போகிறது. கவர்ன்மெண்டார் கொடுக்கும் கிராண்டு ஆசிரியர்களுக்குப்போய்ச் சேராமலிருக்கும் தீங்கைக் கண்டுபிடித்துத் தடுக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

கவர்ன்மெண்டார் நடத்தும் பள்ளிக்கூடங்களை விட உத்தேசமில்லை. அதோடு உதவிப் பள்ளிக்கூடங்களை அபிவிர்த்தி செய்யவும் அவற்றிற்கு உதவியளிக்கவும் முயற்சி செய்யப்படும். உதவிப்பள்ளிக்கூட மூலம் கல்விபோதிப்பதே மலிவானது. பள்ளிக்கூடங்களைத் திடீரென்று சென்று பார்க்கும் வழக்கம் இப்போதுமிருந்து வருகிறது.

மிஷனரிப் பள்ளிக்கூடங்கள் உண்மையில் கல்வி பரவுவதற்கு உதவியளித்துவருவதால் அவற்றை யாதரிக்க வேண்டுமென்பதே என்னுடைய நீடித்த அபிப்பிராயம்.

சில விஷயங்களைத்தான் புதிய கவர்ன்மெண்டுக்கு விடமுடியும். சிலவற்றை உடனே நடத்திவைத்தாக வேண்டும். டிவிஷனல் இன்ஸ்பெக்டர்கள் நியமனத்தை ஒத்திவைக்க முடியாது. டெப்டி இன்ஸ்பெக்டர்களின் தொகையை அதிகரிப்பது பலராலும் ஆதரிக்கப்பட்டிருக்கிறது. பள்ளிக்கூடங்களுக்கு அங்கீகாரமளிப்பதும் மறுப்பதும் ஜில்லாக் கல்விக் கவுன்சில்களின் வேலையாகவிருந்துவருகிறது.

### திறமையான பள்ளிக்கூடங்கள்

திறமையான பள்ளிக்கூடங்களை அடியோடு எடுத்துவிடவில்லை. அபிவிர்த்தி செய்து பலப்படுத்தவே முயன்றுவருகிறோம். திறமையானவற்றை எப்படிக்கண்டுபிடிப்பதென்று ஸர், பாத்ரோ கேட்டார். 30 பேர்களுக்குக் குறையாததாயும் பயிற்சிபெற்ற ஆசிரியர்கள் அதிகமாயுள்ளதாயும் முதல் வகுப்பில் 100 பேர்களிருந்தால் 3, 5-வது வகுப்புகளில் 75 பேர் விதமாவது இருப்பதாயும் உள்ள பள்ளிக்கூடங்களையே திறமையானதாகக் கருதுவோம். அபிவிர்த்தி யோசனை எதை நடத்திவைப்பதாயிருந்தாலும் அதிகப்படி உத்தியோகஸ்தர்கள் வேண்டும். தாழ்ந்த வகுப்பினர் பள்ளிக்கூடங்களும் விதிகளின் படித்தான் கிராண்டுபெற முடியும். திறமை அவசியமாகும். தொழிற் கல்வி போதிக்கும் விஷயம் யோசனையிலிருந்து வருகிறது. ஆரம்ப வகுப்புகளிலேயே மாணவர்

டிரெயினிங் அளிக்க ஏற்பாடு செய்யப்படும். பயிற்சிபெற்ற இண்டர் மீடியேட் ஆசிரியருக்கும் ஸ்கூல் பைனல் ஆசிரியருக்கும் அதிக வித்தியாசமில்லை. வித்தியாசம் காட்டுவதும் நம்மிடம் இன்னுமதிகப் பணமிருக்கும்போது தான் கவனிக்கப்படலாம்.

ஆசிரியர்களின் வேலை கூடியவரை சாச்வதமாயிருக்க வழி செய்யப்படும். ஆசிரியர்கள் வேறு வேலை செய்வதைத் தடுப்பது ஆசிரியர் வேலை நிலைமையுடன் சேர்த்து ஆராயப்படும். தொழிலாளர் பள்ளிக்கூடங்களைத் திடீரென்று மூடிவிடுவது சாத்தியமில்லை. கவர்ன்மெண்டாரே பாட புஸ்தகங்களை வெளியிடும் விஷயம் மிகவும் பெரியது அதை இப்போது பைசல் செய்வது சாத்தியமில்லை. லோக்கல் போர்டுப் பள்ளிக்கூடங்களை அபிவிருத்தி செய்யும் விஷயம் சில மாதங்களாக கவர்ன்மெண்டால் கவனிக்கப்பட்டு வருகிறது. போதனப் பயிற்சி முதலியவற்றைத் திருத்த ஆராய்ச்சி நடந்து வருகிறது. பள்ளிக்கூடங்களில் மதபோதனையை எவ்வளவு தூரம் நடத்துவதென்பது சுலபமாக முடிவு செய்யக்கூடியதல்ல. கவர்ன்மெண்டின் மொத்தத்திட்டத்திற்கு 9 லக்ஷ ரூபாய் வேண்டும். இவ்வருஷம் 460100 ரூபாய் தான் கேட்கப்படுகிறது.

திரு. பிரேமையர் தொகை குறைக்கும் பிரேரபணையை வாபீஸ் வாங்கிக்கொண்டார்.

460100 ரூபாய் உபமான்யம் அநுமதிக்கப்பட்டது.

# முடி துறந்த மன்னர்

5-வது ஜார்ஜ் மன்னரின் இரண்டாவது பிள்ளையும் இதுவரை டியூக் ஆப்யார்க் என்ற பெயருடனிருந்து வந்தவரும் இப்போது 6-வது ஜார்ஜ் என்ற பெயருடன் பட்டத்துக்கு வந்திருப்பவருமான புதிய மன்னர் 1895 டிசம்பர் 14-ந்தேதி பிறந்தார். அவர் ஆரம்பத்தில் கப்பல் படையில் பயிற்சிபெற்று 1913-ம் மிட்ஷிப்மன் என்ற உத்தியோகம் பெற்றார். யுத்தகாலத்தில் முதலில் கடற்படையிலும் பிறகு ஆகாயப் படையிலும் சேவைசெய்தார். யுத்தம் முடிந்தபின் கேம்பிரிட்ஜ் ஸர்வகலாசாலையில் சேர்ந்து படித்தார். 1920-ம் வருஷம் ஜூன் மாதம் அவர் டியூக் ஆப் யார்க் என்ற பட்டமளிக்கப்பட்டார். 1921-ல் கடற்படைத் தலைவர் பதவிக்கு உயர்த்தப்பட்டார்.

1923 ஏப்ரல் 26-ந்தேதி அவருக்கும் லேடி எலிஸ்பெத் போஸ்லியானுக்கும் கல்யாணம் நடந்தது. இவர் ஏர்ல் ஆப்ஸ்டிராத்மூரின் குமாரி. மன்னர் பிரதிநிதியாக அவர் பலர் ஐரோப்பிய தேசங்களிலும் முக்கிய கொண்டாட்டங்களில் கலந்து கொண்டிருக்கிறார். 1925-ல் அவர் வெம்பிளிக் காட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ப்ரிவி கவுன்ஸில் மெம்பராயும் நியமிக்கப்பட்டார்.

1926 ஏப்ரல் 21-ந்தேதி எலிஸபெத் அலெக்சாண்டிரா மேரி என்ற ராஜகுமாரி யார்க்கு கோமகனுக்கு முதற் குழந்தையாகப் பிறந்தாள்.

ஆஸ்திரேலியாவின் புதிய தலை நகரமான கான்பராவின் நடந்த கொண்டாட்டங்களுக்கு யார்க்கு கோமகனும், சீமாட்டியும் 1927 ஜனவரியில் புறப்பட்டுச் சென்றனர். 1928 டிசம்பரில் ஜார்ஜ் மன்னர் தேக அசௌக்கிய காலத்தில் இவர் ஸ்டேட்கவுன்ஸில் மெம்பராயிருந்தார். மார்கரெட் ரோஸ் என்ற இரண்டாவது ராஜகுமாரி1930 ஆகஸ்டு 21-ந்தேதி பிறந்தாள்.

1936-ல் இவர் ராணுவத்திலும், கடற்படையிலும். பல உயர்பதவிகளுக்கு நியமிக்கப்பட்டார்.

முடி துறந்த மன்னர்

இப்போது பிரிட்டிஷ் அரசுரிமையைத் துறந்துவிட்ட 8-வது எட்வர்டு மன்னர் 1894 ஜூன் 23-ந்தேதி பிறந்தவர். 1902 முதல் 1914 வரை ஹன்ஸல் என்பவர் அவருடைய ஆசிரியராக விருந்துவந்தார். 1907-ல் அவர் கடற்படைப்பயிற்சி பெற வாரம்பித்து 1911-ல் முடித்தார். அவருடைய பிதா பட்டத்திற்கு வந்ததும் 1911-ல் ஜூலை 13-ந்தேதி இவர் வேல்ஸ் இளவரசராக்கப்பட்டார். பின்னர் யுத்தக் கப்பலில் சேவைக்குச் சென்றார்.

1912-ல் அவர் பாரிஸில் சில மாதம் பிரெஞ்சு பாஷை கற்றபின் அக்டோபரில் ஆக்ஸ்போர்டு ஸர்வ கலாசாலையில் சேர்ந்தார். ஐரோப்பிய யுத்த மேற்பட்டதும் அவர் படிப்பை நிறுத்தி விட்டு யுத்த சேவைக்குச் சென்றார்.



பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் பல பாகங்களிலும் இவர் அடிக்கடி சுற்றுப்பிரயாணம் செய்திருக்கிறார். 1919-ல் கானடாவில் சுற்றுப் பிரயாணம் செய்தார். யுனைடெட்ஸ்டேட்ஸிற்கும் சென்றிருந்தார். 1920 மார்ச்சில் நியூஜிலந்து. ஆஸ்திரேலியாவுக்குச் சென்றார்.

1921 அக்டோபரில் இந்தியாவுக்குப் புறப்பட்டு வந்தார். 1922 மார்ச்சு மாதம் இங்கிருந்து ஜப்பானுக்குப் புறப்பட்டுச்சென்றார்.

1925-ல் மீண்டும் கானடா, தென் ஆப்பிரிக்கா முதலிய விடங்களுக்குச் சென்றார். 1927-ல் இங்கிலாந்தில் கைத்தொழிற் பிரதேசங்களை நேரில் சென்று பார்த்தார்.

1928 முதல் அவர் தமது அலுவல்களைத் துரிதமாக கவனிக்க ஆகாய விமானம் ஒன்றை உபயோகிக்க வாரம்பித்தார். அவ்வருஷம் கிழக்காப்பிரிக்காவுக்குச் சென்று விட்டுத் தகப்பனர் தேக அசௌக்கியத்தால் திடீரென்று திரும்பிவந்தார்.

# ஆரம்பக் கல்விச் சட்டத்திருத்தம்

## G. O. No., 2564 (1-12-36)

1922-2-21-ல் நிறைவேற்றப்பட்ட கல்விச் சட்ட திருத்தங்கள் மீண்டும் டிசம்பர் மாதம் முதல் தேதி திருத்தப்பட்டிருக்கின்றன.

I (a) பழைய சட்டம் 41-வது செக்ஷன் 1-வது பிரிவு-ரிகக்னிஷன் சம்மந்தமாகவுள்ளதில் முதலாவது விதியுடன் கீழ்க்காணும் விஷயம் சேர்க்கப்பட்டிருக்கிறது;—

பள்ளிக்கூட டெப்டி இன்ஸ்பெக்டர்களிடமாவது அல்லது சப்-அஸிஸ்டெண்டு இன்ஸ்பெக்டர்ஸ் இடமாவது புதிய பள்ளிக்கூடம் ஏற்படுத்த விரும்பும் நிர்வாகஸ்தர்கள் முன்னதாகவே அநுமதிபெற்றிருக்கவேண்டும். அவ்விதம் அவர்களிடமிருந்து அநுமதி பெறாது திறக்கப்பட்ட பிரைவேட் நிர்வாகஸ்தர்களுடைய பள்ளிக்கூடம் அங்கீகாரம் செய்யப்படமாட்டாது.

b. I-A, சட்டத்திற்குப்பின் கீழ்க்காணும் விஷயம் சேர்க்கப்பட்டிருக்கிறது.

"I-B. தற்காலிக அங்கீகாரம் பெற்றிருந்த பள்ளிக்கூடங்களின் நிர்வாகஸதர்கள் அங்கீகாரத்துக்குக் குறிப்பிட்டகாலம் கடந்து ஒரு மாதத்திற்குள் மேற்பார்வை உத்தியோகஸ்தர்கள் மூலமாக ஜில்லாக் கல்விச் சபைக்கு மீண்டும் அங்கீகாரம், தருப்படி மனுச்செய்து கொள்ள வேண்டும்.

c. 6-வது விதிக்குப் பதிலாகக் கீழ்க்காணும் விஷயம் சேர்க்கப்பட்டிருக்கிறது;—

6. ஆவரேஜ் அட்டன்டென்ஸில் 35 பையன்களுக்குக் குறைந்தது ஒரு ஆசிரியராவது இருக்கவேண்டும்.

ஆவரேஜ் அட்டன்டென்ஸ் ஒரு வகுப்பிலோ அல்லது ஒரு வகுப்பின் ஒரு செக்ஷனிலோ 35 பையன்களுக்கு மேற்படுமானல், அந்த வகுப்பு இரண்டாகப் பிரிக்கப்படவேண்டும். டெப்டி இன்ஸ்பெக்டர் அல்லது சப் அஸிஸ்டெண்டு இன்ஸ்பெக்டர்ஸ் யோசனைப்படியும் நடந்து கொள்ளலாம்.

II. அதிகாரம் I-செக்ஷன் 42 (2)—உதவி பெறும் விதிகள்.

a. 1-வது விதியின், கடைசிவாக்கியமாகிய "இந்தக் கணக்குப் பிரகாரம் கணக்கிடப்பட்ட கிராண்டுத் தொகையானது அஸெஸ்டு கிராண்டு என்று கூறப்படும்" என்பது நீக்கப்பட்டு கீழ்க்காணும் விஷயம் சேர்க்கப்பட்டிருக்கிறது:-

இரண்டு மணி நேரத்திற்கு அதிகமாகவோ மதபாடம் கற்பிக்கப்படும் பள்ளிக்கூடங்களுக்கு, ஒரு நாளைக்கு ஏற்பட்ட நேரத்தில் நான்குமணி நேரத்திற்குக் குறைந்[illegible] லது இரண்டு மணி நேரத்திற்கு [illegible]

மேற்குறித்த பிரகாரம் அரைவாசி விதம் தான் கிராண்டு கணக்கிடப்படும்.

b. I-B விதிக்குப் பிறகு கீழ்க்காணும் விஷயம் சேர்க்கப்பட்டிருக்கிறது.

"I C. கிராண்டின் அஸெஸ்மெண்டு:—

1. மொத்த ஆவரேஜ் அட்டெண்டென்ஸில் 25 பிள்ளைகளுக்குக் குறைந்த பள்ளிக்கூடத்தில் இருக்கும் ஓராசிரியருக்கும் கிராண்டு கணக்கிடப்படமாட்டாது.

2. ஆவரேஜ் அட்டெண்டென்சுப் பிரகாரம் 25 பிள்ளைகள் இருக்கும் பள்ளிக்கூடங்களிலிருக்கும் ஆசிரியர்களில் 25 பிள்ளைகளுக்கு ஓராசிரியர் வீதம் கிராண்டு தொகை அளிக்கப்படும்.

அதுவும் கீழ்க்காணும் பிரிவு விதிப்படியே.

i நான்காவது ஐந்தாவது வகுப்பில் வாசிக்கும் இரண்டு பிள்ளைகள் மூன்று பிள்ளைகளாகக் கணக்கிடப்படுவர்.

ii இரண்டு வருஷத்திற்கு மேலும் அதே வகுப்பில் வாசிக்கும் பிள்ளைகளும், ஐந்து வயதுக்குட்பட்ட பிள்ளைகளும் கணக்கெடுக்கப்படமாட்டார்கள்.

3. இரண்டாவது பிரிவுப்படி ஆசிரியர்களுடைய தொகையை நிர்ணயிப்பதில் தொகையில் பாதிக்குக் குறைந்தால் அது தள்ளிவிடப்படும். தொகை பாதியும் அதற்கு மேற்பட்டும் வந்தால் முழுத்தொகையாக ஆக்கிக்கொள்ளப்படும்.

4. இரண்டாவது பிரிவுப்படிதான் ஆசிரியர்களுக்குக் கிராண்டு கொடுக்கப்படும். பள்ளிக்கூடத்தில் வகுப்புக்களுக்கும் வகுப்புப் பிரிவுகளுக்கும் மேற்பட்ட உபாத்தியாயர்களிருந்தால் அவர்கள் கணக்கில் சேர்க்கப்படமாட்டார்கள்.

5. மேலே கூறிய 2, 3, 4 உட்பிரிவு விதிப்பிரகாரமே கிராண்டு கணக்கிடப்படும். அத்தொகையே அஸெஸ்டு கிராண்டு என்றும் கூறப்படும்.

6. அஸெஸ்டு கிராண்டு கீழ்க்காணும் விதம் குறைக்கப்படும்.

i முதல் வகுப்பின் தொகையில் ஐந்தாவது வகுப்பில் 100-க்கு 25 வீதத்தை விடக் குறைந்திருந்தால் 100-க்கு 10 வீதம் குறைக்கப்படும்.

ii முதல் வகுப்பின் தொகையில் நான்காவது வகுப்பில் 100-க்கு 25 வீதத்தைவிடக் குறைந்திருந்தால் 100-க்கு 15 வீதம் குறைக்கப்படும்.

iii முதல் வகுப்பின் தொகையில் நான்கு, ஐந்தாவது வகுப்புக்களில் 100-க்கு 25 வீதத்தைவிடக் குறைந்திருந்தால் 100-க்கு 25 வீதம் குறைக்கப்படும்.

I D. ஆசிரியர்களில் 4-A-விதிப்படி உள்ள ஆசிரியர்களுக்கு மேல் நியமிக்கப்பட்டிருக்கும் அதிகப்படியான ஆசிரியர் பயிற்சியில்லாத ஆசிரியர்களுக்குக் கிராண்டு கொடுக்கப்படமாட்டாது.

அறிவிப்பு: இந்த விதி 1936 டிசம்பர் முதல் தேதியிலிருக்கும் பள்ளிக்கூடங்களில் 1936 ஜனவரி முதல் தேதிமுதல் அமுலுக்குக் கொண்டுவரப்படும்.

c. அதிகாரம் 1, விதி 2-ல் உதவி விதிகள். செக்ஷன் 42 (2)-1, 2, 3, உள் விதிகளுக்குப் பதிலாகக் கீழ்காணும் விதிகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன:—

"(1) (a) மேற்பார்வை அதிகாரிகள் ஒருபள்ளிக்கூடத்திற்கு ஏற்பட்ட அஸெஸ்டு கிராண்டின் குறைவுக்கு கீழ்க்காணும் குறைகளின் மேல் சிபார்சு செய்யலாம்:—

i நிர்வாகத்திலும், ஒழுங்கிலும், போதிப்பிலும், இடவசதியிலும், எகுப்பெண்டிலும் [நாற்காலி, பெஞ்சு முதலிய சாமான்] குறைவுகளிலும் காணப்படும் குறைகளுக்காக.

ii பிள்ளைகள் இடையில் படிப்பை நிறுத்தி விடுதல் அல்லது ஒரு வருஷத்துக்குமேல் பிள்ளைகளை அதே வகுப்பில் நிறுத்தி வைத்தல்.

iii பள்ளிக்கூடக் கூட்டங்களில் கூட்ட வேண்டியதற்குக் குறைவாகக்கூடிய கூட்டங்களுக்காகவும் அல்லது மதக்கல்விக்கு ஒதுக்கிய நேரத்தைக் குறைத்ததற்காகவும்.

iv அம்மைநோய் வராதிருக்குத் தடை செய்து கொள்ளாத பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்தில் வைத்திருப்பதற்காகவும்

v பள்ளிக்கூடக் கட்டடங்களை அரசியல் விஷயம் போன்ற விஷயங்களுக்கு அனுமதித்ததற்காகவும்

vi பாடப் புத்தகக் கமிட்டியாரின் அங்கீகாரம் பெறாத புத்தகங்களைப் பாடமாக வைத்ததற்காகவும் இடத்துக்குத் தக்கபடி டெப்டி இன்ஸ்பெக்டர் அல்லது சப் அஸிஸ்டெண்டு இன்ஸ்பெக்டரஸ் இவர்களிடம் அனுமதி பெறாமல் ஐந்து ஆண்டுகளுக்குமுன் வைத்த பாடப் புத்தகத்தை மாற்றியதற்காகவும்.


யசூடன் வைர நகைகள்

சவரன் பொன்னிற்கு உத்திரவாதத்துடன்

: : அனுப்பப்படும். : :




விலை விபரம்.

| நெ. | | ரூ. | அ. | நெ. | | ரூ. | அ. | நெ. | | ரூ. | அ. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | கிளாவர் | 4 | 4 | 9 | தொங்கட்டம் | 4 | 8 | 17 | இலைபேசரி | 7 | 8 |
| 2 | ,, | 4 | 8 | 10 | (8-கல்) பேசரி | 7 | 8 | 18 | ,, | 5 | 0 |
| 3 | ரவுண்டு பேசரி | 5 | 8 | 11 | ,, ,, | 8 | 0 | 19 | புலாக்கு | 10 | 0 |
| 4 | கொடி பேசரி | 9 | 0 | 12 | ,, ,, | 10 | 0 | 20 | மூக்கு திருகாணி | 5 | 0 |
| 5 | ரவுண்டு திரு | | | 13 | அன்ன பேசரி | 8 | 0 | 21 | ,, | 5 | 0 |
| | காணி | 8 | 0 | 14 | கிளி பேசரி | 8 | 0 | 22 | ,, | 4 | 8 |
| 6 | பேசரி | 4 | 4 | 15 | (4-கல்) மூக்கு | | | 23 | ,, | 4 | 0 |
| 7 | ,, | 5 | 8 | | திருகாணி | 6 | 0 | 24 | ,, | 3 | 12 |
| 8 | தொங்கட்டம் | 4 | 0 | 16 | (5-கல்) ,, | 7 | 8 | 25 | ,, | 3 | 8 |

தபால் சார்ஜ் பிரத்தியேகம். — கேட்லாக் இனாம்!

கிடைக்குமிடம்

பி. கோபாலசுவாமி நாயுடு அண்டு சன்ஸ்

5, புதுப்பேட்டை தெருவு, பரங்கிமலை P. O. (மதராஸ்)

ஆபீஸ்:— 234, கோவிந்தப்ப நாய்க்கன் தெருவு, சென்னை.


MADRAS
190345

# ஆரம்பகல்வி
## ELEMENTARY EDUCATION

"ஆரம்பக் கல்வி"யின் முன்னேற்றத்திற்காக உழைக்கும் ஓர் மாதாந்திரப் பத்திரிகை.

EDITOR.

P. VEERARAGHAVAN (Member, District Educational Council Madras)

"எப்பொரு ளெத்தன்மைத்தாயினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

## புதியமந்திரிகளும் ஆரம்பக்கல்வியும்

சமீபத்தில் நடந்த சட்ட சபையில் கல்விக்காக சுமார் 2 கோடி ரூபாய் மான்யம் கொடுப்பதற்கு விவாதம் வந்தது. அதில் சுமார் 3-மணி நேரம் விவாதம் நடந்தும் ஆரம்பக் கல்வியைப் பற்றி வெகு சிலரே பேசினர். எல்லாரும் ஹிந்தியைப்பற்றியும் காலேஜ் கமிட்டிகளைப் பற்றியும் அதிகம் பேசினார்களே ஒழிய ஆரம்பக் கல்வியைப்பற்றி அதிகம் பேசாதது மிகவும் வருந்தத்தக்கது. இதைப்பார்க்கும்போது ஆரம்பக் கல்வியைப்பற்றி தற்போதிய காங்கிரஸ் சட்டசபை அங்கத்தினர்கட்கு அதிகமாக ஒன்றும் தெரியாதிருக்கவேண்டும், இல்லையேல் சில பத்திரிகைகள் கூறுகிறபடி பிரதம மந்திரி ராஜாஜி அவர்கள் அங்கத்தினர்கட்கு வாய்ப்பூட்டு போட்டிருக்கவேண்டும். திரு. டைரக்டர் துரை அவர்கள் ஆசிரியர்கள் பால் அன்பு கூர்ந்து ஹையர், செகண்டரி கிரேட்டு உபாத்தியாயர்களுக்கு ரூ. 1. உயர்த்திக்கொடுக்கும்படி அரசாங்கத்தாருக்கு சிபார்சு செய்ததாக வதந்தி. அவ்விதம் கல்வி அதிகாரியே சிபார்சு செய்தபோது நமது காங்கிரஸ் மந்திரிகள் புணம் இல்லை என்ற காரணத்தினால் புறக்கணித்தது தற்போதிய காங்கிரஸ் அரசாங்க ஏழை ஆசிரியர்கள் மீது வைத்துள்ள காரு யத்தை நன்கு எடுத்துக்காட்டுகிறது. ஆகவே அழுத குழந்தையே பால் குடிக்கும் என்ப போல ஆசிரியர்கள் பல மகாநாடுகளைக் கா கிரஸ் தலைவர்களின் கீழ் கூட்டி, கிளர்ச்சி செ தால் தான் அடுத்த வருஷமாவது ரூ. 1. அ கத்தை அடைய முடியும்.

### தேர்ச்சி பெறுத ஆசிரியர்கள்

உத்தியோகம் கிடைக்காத இக்காலத்தி சில கல்வி கற்ற மாணவர்கள் ஆசிரி தொழிலைக்கைக்கொண்டுவருகின்றனர். வரு வருடம் போதனா முறைப் பாடசாலையில் றுக் கணக்காக பயிற்சி பெற்று வருகின்ற பரீட்சையில் எல்லோரும் தேர்ச்சிபெற யாது. சாதாரணமாக மூன்றில் ஒரு ப ஒன்றிரண்டு பாடத்தில் குறைந்த மார்க்கு வாங்கி தேர்ச்சி பெறாது போகின்ற தேர்ச்சி பெறாத ஆசிரியர்கள் பாடசா ஆசிரியர் வேலையையும் பார்த்துக்கொ நாளடைவில் பரீட்சையில்தேர்ந்துவிடுவ


A NEW SERIES OF ENGLISH READERS FOR SCHOOLS IN INDIA.

## The Coronation English Readers

EDITED BY PROOF. J. C. ROLLO, M. A.
Principal, Maharaja's College, Mysore.

| | | |
|---|---|---|
| Primer, Part I | (3rd Class) | Annas 3 |
| Primer, Part II | (4th Class) | Annas 3 |
| Primer, Parts I & II | | Annas 6 |
| Book I | (5th Class) | Annas 6 |
| Book II | (1st Form) | Annas 8 |
| Book III | (2nd Form) | Annas 10 |
| Book IV | (3rd Form) | Annas 12 |

The above series of English Readers are the result of thorough study of the present day needs of pupils learning English Readers at the early stages. The books are well got up with many illustrations. A perusal of the books will convince any teacher of their special merit.

Applications for specimens from teachers will be attended to immediately

P. G. PAUL & Co., EDUCATIONAL PUPBLISHERS
12, Francis Joseph St., G. T. Madras.

## ஹரிதாஸர் கைக்கண்ட அவிழ்தங்கள்

1. 'கக்வா' கக்வானுக்கு மிகவும் கைக்கண்டது; ரிஜிஸ்டர் செய்யப்பட்டது. இந்த வியாதிக்கு உலகத்தில் சகல மருந்துகளிலும் இதுவே மிகவும் மேலானது; உபயோகித்துப் பார்த்தவர்கள் விளம்பரம் செய்கிறார்கள் ... புட்டி ரூ. 1.

3 புட்டி வாங்கினால் தபால் சார்ஜ இனாம்.

2. க்லோரோசலினால் இது ஹரிதாசர் காலரா துளி மருந்து; தவறினதே கிடையாது. அபூர்வமான மருந்து 30—35 வருஷ அனுபவம்; வாந்தி காலரா, பேதி, வயிற்றுநோய் இவைகள் விரைவில் நீங்கும். புட்டி ரூபா 1 2 0

3 என்னைத் தைலம். ஸ்நானத்திற்கு உபயோகித்தால் சகலவிதமான கண் நோய்களும் நீங்கி சிரசு குளிர்ச்சியாய் கண்களிற்கு ஒளி உண்டாகும். ராஜ உருப்புக்களிலுள்ள மேகச்சூடு நீங்கும். புட்டி விலை ரூபா 1 4 0

### மருந்து காட்லாக் இனாம்.

ஆசிரியர்களுக்கும் வைத்தியர்களுக்கு மாத்திரம் ரூ. 5 மருந்திற்க்கு குறையாமல் ஆர்டர் அனுப்பினால் ரூ 1. தள்ளி கொடுக்கப்படும்.

ஆஸ்த்மா நீரிழிவு முதலிய வியாதிகளுக்கு
கைகண்ட மருந்துகள், விபரம் காட்லாக் இவைகளுக்கு விலாசம்



Dr. H. தேவதாசர் B. A. L. T., M. T. Sc.,
தாசர் சித்த வைத்திய சாலை,
தின்னனூர் R. S.

Registered No M. 3671


# Venkatrama & Co.

Printers, Publishers, Book-sellers, Etc.

## தமிழக வாசகம்.

Vidwan R. Viswanatha Iyer
Tamil Pandit
[Presidency College, Madras]
ஒன்று முதல் 8-வது வகுப்புக்களுக்குப்
பாட புத்தகங்களாக வைக்கத்
தகுந்தவை.

## நீதி கதா வாசகங்கள்

ஒன்று முதல் 5-வது வகுப்பு வரையில்
உப பாடங்களாக வைக்கத் தகுந்தவை.

in Tamil and Telugu
I to 5.
Indian History
IV & Vth Classes in Tamil& Telugu

Pictorial Chorts
Containing 46
KINDERGARDEN TAMIL COPY BOOK.
1 to 5.
SEMI UPRIGHT ENGLISH COPY.
1 to 6
P. Sankaranarayana Dictionary.
English & Telugu
Medium & Gem Sizes
Ask for the Specimen of our Tamilagha
Vachagams.
1 to 8.

Fruit Market
CHINA BAZAR ROAD, MADRAS.

## நவ யௌவனம் வேண்டின்

உலகப்பிரசித்தி பெற்ற தேக புஷ்டிக்கும்
தாது புஷ்டிக்கும் சிறந்த டானிக்

40 மாத்திரைகள் அடங்கிய

## மதன மஞ்சரியை

உபயோகியுங்கள்.



இம் மாத்திரைகள் அஜீர்ணம், மலச் சிக்கல், ஞாபகக் குறைவு, நரம்புத்தளர்ச்சி இவைகளை நாசமாக்கி தேக புஷ்டியும் தாது புஷ்டியும் கொடுத்து இல்லறவாழ்க்கையில் இன்பத்தையும் ஊக்கத்தையும் தரும்.

டப்பி 1-க்குவிலை ரூ. 1.

**மதன மஞ்சரி பார்மஸி,**

94 சைனு பஜார் ரோட், மதருஸ்.